FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348064

1. District : Krishnagiri PS: VSAC Year: 2025 FIR No.: 07/AC/2025 Date: 21.05.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: by the PC amendment Act-2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : Before 05.00 hrs on 21.05.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 21.05.2025, 15.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Through sources.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: RTO Check Post, Kali Koil Kuruvinayanapalli, Krishnagiri District. About 23 KMS, North
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Nagarajan (b) Father's/ Husband's Name : T.A. Mariyappan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 30.04.1968 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு Age-57 நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : – Place of Issue : –
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Superintendent of Police (g) Address : O/o The Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption Krishnagiri
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. S. Syed Javathu Ahamed, Age-59, S/O Syed Ghouse, Motor Vehicle Inspector (M.T), RTO Check Post, Kali Koil, Kuruvinayanapalli, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : –
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO-MOTO

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 21/5/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.05.2025 at 16.30 hrs.

Name: பெயர் M.NAGARAJAN
Rank: நிலை DEPUTY SUPERINTENDENT OF POLICE No. எண் .....
VSAC, KRISHNAGIRI

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2025 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்-12 ன் தொடர்ச்சி.

மா.நாகராஜன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தருமபுரி, (மு.கூ.பொ) கிருஷ்ணகிரி ஆகிய எனக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி இன்று 21.05.2025 ஆம் தேதி அதிகாலை 05.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், காளிக்கோவில் போக்குவரத்துத்துறை சோதனை சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ் நாட்டிற்குள் நுழையும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு செல்லும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரசு சாட்சிகள் திரு.C.பிரபாகர், வருவாய் ஆய்வாளர், சூளகிரி உள்வட்டம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.P.சங்கர், கிராம நிர்வாக அலுவலர், 135, தியாகரசனப்பள்ளி வருவாய் கிராமம், சூளகிரி உள்வட்டம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் 21.05.2025 ஆம் தேதி காலை 07.45 மணி முதல் பகல் 12.30 மணி வரை அந்த சோதனை சாவடியில் என்னால் ஒரு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 20.05.2025 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் 21.05.2025 ஆம் தேதி காலை 08.00 மணி வரையில் அரசு கட்டணம் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.26,865/- என்று தெரிவித்தார். மேற்படி வசூல் செய்யப்பட்ட பணத்தை பற்றி கேட்க மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்கள் அவர்கள் மேற்படி அலுவலக நுழைவு வாயிலுக்கு எதிரில் இருந்த இரும்பு மேசையின் வலது மேல் டிராயரில் இருந்த பணத்தை எடுத்து பணம் எண்ணும் இயந்திரம் மூலமாக கணக்கிட்டு சொன்னதில் மொத்தம் ரூ.26,865/- இருந்தது. அதனை பல்வேறு தலைப்புகளின் கீழ் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகையுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அதில்

ரூ.26,865/- சரியாக இருந்தது. பின்னர் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.26,865/-ஐ மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களிடம் கொடுத்து, அந்த பணத்தை முறையாக அரசு கணக்கில் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. பிறகு மேற்படி அலுவலகத்திற்கு வெளியே ஆந்திர மாநிலம் குப்பத்திலிருந்து கிருஷ்ணகிரியை நோக்கியும், கிருஷ்ணகிரியிலிருந்து குப்பம் நோக்கியும் செல்லும் வாகனங்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு நபர்களை அழைத்து அவர்களைப் பற்றி விசாரிக்க அவர்களது பெயர் 1) P.ராமசாமி மற்றும் 2) R.சிவகுரு என்றும், காளிக்கோவில் சோதனை சாவடியில் பணியாற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இடைத்தரகர்களாக இருந்துவருவதாகவும் தெரிவித்தார்கள். பிறகு தனிநபர் திரு.P.ராமசாமி என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து 50/- ரூபாய் எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்காக வைத்துள்ள சொந்தப்பணம் என தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே அரசு சாட்சிகளின் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு அங்கிருந்த மற்றொரு தனி நபரான திரு. R.சிவகுரு என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் ஆம் என்று சொல்லி தனது சட்டையின் இடதுபக்க மேல்புற வெளி பாக்கெட்டிலிருந்து 810/- ரூபாய் எடுத்து ஆஜர் செய்து தன்னுடைய கை செலவிற்காக வைத்துள்ள சொந்தப்பணம் என தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடமே அரசு சாட்சிகளின் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் ஆம் என்று சொல்லி அவருடைய பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.3,500/-ஐ எடுத்து ஆஜர் செய்து தான் சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததாலும், அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதற்கான உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு அவருடைய இருக்கைக்கு மேல் இருந்த கணினிக்கு பின்புறத்தில் ஒரு கிழிந்த நிலையில் இருந்த ரோஸ் நிற காகித கோப்பு அட்டை இருந்தது. அதனை திறந்து பார்க்க அதில் பணத்தாள்கள் இருந்தன. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக்

கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுனர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 44 எண்ணிக்கையிலும், 200/- ரூபாய் தாள்கள் 22 எண்ணிக்கையிலும், 100/- ரூபாய் தாள்கள் 44 எண்ணிக்கையிலும், ஆக மொத்தம் ரூ.30,800/- இருந்தது. அந்தப் பணம் வாகன ஓட்டுனர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் அந்த பணம் ரூ.30,800/- செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அரசு சாட்சிகளை அழைத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு வலது புறத்தில் கிழக்கு சுவரை ஒட்டி போடப்பட்டிருந்த இரும்பு மேசையினை அரசு சாட்சிகள் முன்னிலையில் காவலர்கள் உதவியுடன் சோதனை செய்யப்பட்டது. அப்போது மேற்படி மேசையின் மீது அலுவலகத்தில் பொறுத்தப்பட்டிருந்த CCTV கேமராக்களை கண்காணிக்கும் மானிட்டர் அமைக்கப்பட்டிருந்தது. மேற்படி இரும்பு மேசையின் வலதுபுறமானது இரண்டு பகுதிகளாக தடுக்கப்பட்டிருந்தது. அதில் மேல் பகுதில் இருந்த டிராயரை அரசு சாட்சிகளின் முன்னிலையில் திறந்து சோதனை செய்தபோது, அதில் ஒரு காக்கிநிற காகித கவர் இருந்தது. அந்த கவரை அரசு சாட்சிகளின் உதவியுடன் எடுத்துப் பார்க்கையில் அதில் 500,200,100 ரூபாய் தாள்கள் கற்றையாக இருந்தது. அந்த பணத்தை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 77 எண்ணிக்கையிலும், 200/- ரூபாய் தாள்கள் 27 எண்ணிக்கையிலும், 100/- ரூபாய் தாள்கள் 61 எண்ணிக்கையிலும், ஆக மொத்தம் ரூ.50,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களிடம் கேட்க, அவர் இன்றைய தினம் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் அவர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். ஆகவே அந்தப் பணம் ரூ.50,000/- கையூட்டு பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி அலுவலக மத்திய அறைக்கு கிழக்கு புறத்தில் அமைந்திருந்த ஓய்வு அறை மற்றும் பதிவேடுகள் இருப்பு அறை முழுவதும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது, பதிவேடுகள் இருப்பு அறையின் தென்மேற்கு சுவரை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த ஒரு

இரும்பு அலமாரியில் பழைய பதிவேடுகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அந்த பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்த இரும்பு அலமாரியினை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்தபோது மேற்படி இரும்பு அலமாரியானது 6 தட்டுகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. அதில் மேல் பகுதில் உள்ள முதலாவது தட்டில் மூன்று பகுதிகளாக பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதில் வலது புறத்தில் உள்ள பதிவேடுகளை எடுத்து சோதனை செய்தபோது, அந்த பதிவேடுகளுக்கு மத்தியில் 500 மற்றும் 100 ரூபாய் தாள்கள் கற்றையாக இருந்தது. அந்த பணத்தை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 25 எண்ணிக்கையிலும், 100/- ரூபாய் தாள்கள் 5 எண்ணிக்கையிலும் மொத்தம் ரூ.13,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களிடம் கேட்க, அவர் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் அவர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். ஆகவே அந்தப் பணம் ரூ.13,000/- கையூட்டு பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் முதலாவது தட்டின் மத்தியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளை எடுத்து சோதனை செய்தபோது, அந்த பதிவேடுகளுக்கு மத்தியில் 500 ரூபாய் தாள்கள் கற்றையாக இருந்தது. அந்த பணத்தை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500/- ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்க, அவர் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் அவர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். ஆகவே அந்தப் பணம் ரூ.50,000/- கையூட்டு பணம் என்பதால் அந்த பணம் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு மேற்படி ஒய்வு அறை மற்றும் பதிவேடுகள் அறை முழுவதும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றக் கூடிய தடயங்கள் எதுவும் இல்லை. இது சம்மந்தமாக 21.05.2025 ஆம் தேதியன்று காலை 07.45 மணி முதல் பகல் 12.30 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார்

செய்யப்பட்டது. அதன் நகல் மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ,1,43,800/- உடன் கிருஷ்ணகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியரான காளிக்கோவில் மோட்டார் வாகன ஆய்வாளர் S.சையது ஜவ்வாது அஹமத் அவர்கள் வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும், நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்ற குற்றத்திற்காக இன்று 21.05.2025 ஆம் தேதி 15.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 -ன்படி குற்றவழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்வைத்தேன்.

21/5/25

காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.